செய்தி வெளியீடு எண் :2404 நாள் : 31.12.2022

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் சார்பில் தென்இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான 2022–23 ஹாக்கி போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் சார்பில் தென்இந்திய பல்கலைக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான 2022–23 ஹாக்கி போட்டியில் வெற்றிப் பெற்ற அணிகளுக்கு பரிசுகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் சார்பில் தென்இந்திய பல்கலைக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான 2022–23 ஹாக்கி போட்டிகள் சென்னையில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் 2022 டிசம்பர் 26 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்த போட்டிகளில் 30 பல்கலைகழக அணிகள் பங்கேற்று விளையாடின. போட்டியில் மைசூர் பல்கலைக்கழகம், கர்நாடகம் (University of Mysore) முதலிடத்தையும், பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு (Bharathiyar University) இரண்டாம் இடத்தையும், கோழிக்கோடு பல்கலைக்கழகம், , கேரளா (University of Kerala) மூன்றாம் இடத்தையும், சென்னை பல்கலைக்கழகம், தமிழ்நாடு (university of tamilnadu) நான்காம் இடத்தையும் பெற்றனர்.

இந்த போட்டிகளுக்குக்கான பரிசளிப்பு விழா இன்று (31. 12. 2022) சென்னையில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. .உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பைகளையும், காசோலைகளையும் வழங்கினார். முதல் பரிசு தொகையாக ரூ. 1– லட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 50– ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ. 25– ஆயிரம், நான்காம் பரிசாக ரூ. 25– ஆயிரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியானது விளையாட்டுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துவருகிறது.

தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டு போட்டிகள் உட்பட அனைத்து விதமான போட்டிகளிலும் தமிழ்நாட்டு விரர் வீராங்கனைகள் கலந்துகொள்ள ஏதுவாக தேவையான பயிர்ச்சிகள் உள்ளிட்ட அனைத்து விதமான உதவிகளையும் செய்யும்.

இந்த விழாவில் மாண்புமிகு சட்டதுறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்யமிஸ்ரா, இ. ஆ. ப., அவர்கள் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் சந்தோஷ் குமார், பதிவாளர் திரு. ரஞ்சித் உம்மன் ஆபிரஹாம், இந்தியன் ஆயில் கார்பொரேஷன் செயல் இயக்குனர் திரு. அசோகன், துணை பொதுமேலாளர் திரு. குமார், பாரத்இன்ஸ்டிடியூட் ஆப் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழக தலைவர் திரு. சந்தீப் ஆனந்த், இந்திய ஹாக்கி சங்க பொருளாளர் திரு. சேகர், திரு. மனோகரன், அர்ஜுனா விருது பெற்ற வீரர் திரு. முஹமது ரியாஸ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in